மலர் : 9 இயேசுகிறிஸ்துவே கர்த்தர் இதழ் : 7
தனிப்பிரதி ரூ. 3

# HUNDRED VILLAGE MINISTRY

**மே 2009**

ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி

हन्ड्रेड विल्लेज मिनिस्ट्री ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി

ஆண்டு சந்தா இந்தியா ரூ.25 வெளிநாடு ரூ.250

# 100- கிராம ஊழியம்

**TAMIL VILLAGE GOSPEL MISSION – மாதாந்திர அறிக்கை**




**TVGM - 2009 மே**
**கர்த்தரின் வாக்குத்தத்தம்**

**கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்.**
சங்கீதம் 115:12



புதுக்கோட்டை மாவட்டம் – **வேந்தன்பட்டி** கிராமத்தில் கட்டப்பட்டு வரும் ஜெபவீட்டை சகோ. ஸ்டீபன்கிறிஸ்டோபர் நேரடியாக பார்வையிட்டு ஜெபித்தார்கள்.

**நன்றி**

**சகோதரி சீதா லட்சுமி ராமகிருஷ்ணன் குடும்பம்**

# இயேசுகிறிஸ்துவே கர்த்தர்

## TAMIL VILLAGE GOSPEL MISSION

**Chief Executive officer    Letter Dated: 11.04. 2009**

**கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!**



தேவனுடைய மிகுந்த கிருபையினால் **கரம்பக்குடி, பொன்னமராவதி** மற்றும் **மணிகண்டம்** யூனியன்களில் ஆலயம் கட்ட சில கிராமங்களை நாங்கள் அடையாளம் காண முடிந்தது. இந்த ஆலயங்களைக் கட்ட தேவன் தாமே திறந்த வாசல்களைத் தர ஜெபியுங்கள். மேலும் இந்த ஆலயங்கள் எந்தவிதமான சிரமமுமின்றி கட்டப்படவும் ஜெபியுங்கள்.

புதிய **"தலைமைத்துவ பயிற்சி நிலையம்"** குறித்தும் அதன் சாத்தியக் கூறுகள் குறித்தும் அதிகமான கிறிஸ்தவ தலைவர்களை சந்தித்துப் பேசும் வாய்ப்பு எனக்கு கிடைத்தது. இதுவரை நாங்கள் ஆய்வு செய்ததன் அடிப்படையில், இதுபோன்ற நிறைவான தலைமைத்துவ பயிற்சி மையங்கள், கிறிஸ்தவ ஸ்தானாதிபதிகளை மத சார்பற்ற இடங்களில் தலைமைத்துவ பொறுப்பு வகிக்க பயிற்றுவிக்க, இந்தியாவில் ஒரு மிகப் பெரிய தேவை உள்ளது என்பதை நாங்கள் உணர்ந்தோம். இதனை பதிவு செய்ய இந்த மாதம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். உங்கள் ஜெபங்களில் இந்த திட்டத்திற்காக ஜெபியுங்கள்.

இந்தியா மிஷன் அசோசியேசன் நடத்திய **"துன்புறுத்தலைக் கிறிஸ்தவர்கள் எவ்வாறு கையாள வேண்டும்"** என்ற யோசனை குறித்த ஒரு கருத்தரங்கில் கலந்து கொண்டேன்.

தேவனுடைய கிருபையால் நானும் எனது தந்தையும் சென்னையில் சில கிறிஸ்தவ தலைவர்களை சந்தித்து புதிய தலைமைத்துவ பயிற்சி திட்டம் குறித்தும் கிராமங்களில் தற்போது நடைபெற்று வரும் ஊழியங்களுக்காகவும் ஜெபிக்க முடிந்தது.

**கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!**

**ஸ்டீபன் கிறிஸ்டோபர்.**

# கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்.

சங்கீதம் 115:12

கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை இந்த மாதம் ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் அன்பு சகோதரனே, சகோதரியே!

இதோ! கர்த்தருடைய வார்த்தை உங்களுக்காகவே கடந்து வருகிறது.

**சங்கீதம் 115:12**

**கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார், அவர் ஆரோன் குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்.**

ஆம்! நம்முடைய தேவன் நம்மை நினைத்திருக்கிறார். அது மாத்திரமல்ல, நமது பாடுகளின் நேரத்திலும், நாம் சோர்வுற்றிருக்கும் நேரங்களிலும், நாம் நம்பிக்கை இழந்து போன மோசமான சூழ்நிலையான நேரங்களிலும் அவர் நம்மை ஆசீர்வதிப்பார். இந்த வசனத்தை நாம் நமக்கு சொந்தமாக்கிக் கொள்வோம். நாம் சொல்லுவோம்.

**கர்த்தர் என்னை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்.**

இந்த மாதத்தை நாம் துவங்கும் வேளையில் நமது கர்த்தருடன் செய்து கொண்ட உடன்படிக்கையை நினைவு கூர்ந்து அதனை புதுப்பித்துக் கொள்வோம். நமது சூழ்நிலை குறித்து அவரிடம் ஜெபிப்போம்.

**சங்கீதம் 115: 1–8**

இந்தப் பகுதியில் சங்கீதக்காரன் சொல்கிறான், “ எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்”. அதோடுகூட சங்கீதக்காரன் ஒரு கேள்வியையும் எழுப்புகிறான் “அவர்களுடைய தேவன் இப்பொழுது எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன் ?” அநேக நேரங்களில் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை ஏற்றுக் கொண்டிருக்கும் நாம் இது போன்ற கேள்விகளை எதிர்கொள்கிறோம். பின்வரும் வசனங்களில் சங்கீதக்காரன் சொல்கிறான் “அவைகளுக்குக் கைகளிருந்தும் தொடாது; அவைகளுக்குக் கால்களிருந்தும் நடவாது; தங்கள் தொண்டையால் சத்தமிடவும் மாட்டாது. அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள் யாவரும், அவைகளைப் போலவே இருக்கிறார்கள்”. நாம் சேவிக்கும் தேவன் ஜெபங்களைக் கேட்கிற தேவனாய் இருக்கிறார், நமது சூழ்நிலைகளை கண்ணோக்குகிறார், எப்போதும் நம்மை ஆசீர்வதிக்க விருப்பம் உடையவராக இருக்கிறார்.

## சங்கீதம் 115:9–11

கர்த்தருக்குப் பயப்படுகிறவர்களே,
கர்த்தரை நம்புங்கள்;
அவரே அவர்களுக்குத் துணையும்
அவர்களுக்குக் கேடகமுமாயிருக்கிறார்.

கர்த்தருடைய பிள்ளைகளாகிய நாம் நமது நம்பிக்கையை வானத்தையும் பூமியையும் உண்டாக்கின நமது தேவன் மேல் வைக்க வேண்டும். நாம் கர்த்தரை நம்பி நமது விசுவாசத்தை அவர் மேல் வைக்கும்போது, நமது துன்ப நேரங் களில் கர்த்தர் நமக்குத் துணையும், கேடகமுமாயிருப்பார்.

## சங்கீதம் 115:12

**கர்த்தர் நம்மை நினைத்திருக்கிறார்,
அவர் ஆசீர்வதிப்பார்; இஸ்ரவேல்
குடும்பத்தாரை ஆசீர்வதிப்பார்,
அவர் ஆரோன் குடும்பத்தாரை
ஆசீர்வதிப்பார்.**

நம்முடைய சூழ்நிலையின்போது நாம் கர்த்தரை நம்புவதற்கு விருப்பம் உள்ளவர்களாக இருந்தால் கர்த்தர் நம்மை நினைத்திருப்பார், அவர் ஆசீர்வதிப்பார்.

## சங்கீதம் 115: 13–18

நாம் சிறியவராய் இருந்தாலும் பெரியவராய் இருந்தாலும் கர்த்தர் ஆசீர்வதிப்பார் **( வசனம் 13 )**

அவர் உங்களையும் உங்கள் பிள்ளைகளையும் வர்த்திக்கப் பண்ணுவார் **(வசனம் 14)**

நாம் செய்ய வேண்டியதெல்லாம் கர்த்தருக்குப் பயப்பட வேண்டும். அவரை நம்ப வேண்டும். என்றென் றைக்கும் அவரை ஸ்தோத்தரிக்க வேண்டும்.

## ஆதியாகமம் 30:22

தேவன் ராகேலை நினைத்தருளினார்; அவளுக்குத் தேவன் செவிகொடுத்து, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார்.

இந்த வசனத்தில் கர்த்தர் ராகேலை நினைத்தருளி, அவள் கர்ப்பந்தரிக்கும்படி செய்தார் என்று நாம் பார்க்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே!

நமது தேவன் நினைத்தருளுகிற தேவன். செவிகொடுத்து நமது வாழ்க்கையில் அற்புதம் செய்கிற தேவன். எந்த சூழ்நிலையானாலும் உதவி நாடி அவரை நோக்கிப் பார்க்க வாஞ்சை உடையவர்களாய் நாம் இருக்க வேண்டும். நாம் அப்படிச் செய்யும்போது தேவன் நம்மை நினைத் தருளுவார், நமது கஷ்டமான சூழ்நிலைகளை அவர் மாற்றுவார் – அது எப்படிப்பட்ட சூழ்நிலையாக இருந்தபோதிலும்.

## யோனா 2:7

யோனா சொல்கிறான் "என் ஆத்துமா என்னிடத்தில் தொய்ந்து போகையில் கர்த்தரை நினைத்தேன்; அப்பொழுது என் விண்ணப்பம் உமது பரிசுத்த ஆலயத்திலே உம்மிடத்தில் வந்து சேர்ந்தது".

யோனாவின் கதையை நாம் படிக்கும் போது யோனா கர்த்தருக்கு கீழ்ப்படி யாமற் போனான் என்று பார்க்கிறோம். ஆனால் அவனது கஷ்டமான நேரத்தில் அவனுடைய ஆத்துமா அவனில் தொய்ந்து போகையில் யோனா கர்த்தரை நினைக்கிறான். நமது வாழ்க்கையிலும் கஷ்டமான சூழ்நிலைகளில் நாம் இருக்கும்போது, நமது சூழ்நிலை குறித்து புலம்புவதை விட்டு, நாம்

தேவனிடம் உதவி கேட்க வேண்டும் என்பதை நினைவு கூர வேண்டும். அவ்வாறு நாம் செய்யும்போது, நம்மை நினைத்தருளி ஆசீர்வதிக்க கர்த்தர் கிருபை உள்ளவராக இருப்பார்.

**சங்கீதம் 119:55**

கர்த்தாவே, இராக்காலத்தில் உமது
நாமத்தை நினைத்து, உமது
வேதத்தைக் கைக்கொள்ளுகிறேன்.

நம்முடைய கஷ்டமான நேரங்களில் தேவன் நம்மை நினைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கும் நாம் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடத்திலும் தேவனை நினைக்க வேண்டும்.

தாவீது கர்த்தரை நினைத்து அவரது பிரமாணங்களுக்குக் கீழ்ப்படிந்ததால் அவனுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய ஆசீர்வாதங்கள் இருந்ததை நாம் பார்க்கிறோம். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து நமது அன்றாட வாழ்வில் அவரை நினைப்போமானால், அவர் நம்மை நினைப்பார், அவரது ஆசீர்வாதங்கள் நம்முடைய வாழ்க்கையில் தங்கியிருக்கும்.

**எண்ணாகமம் 23:20**

***இதோ, ஆசீர்வதிக்கக் கட்டளை
பெற்றேன்; அவர் ஆசீர்வதிக்கிறார்,
அதை நான் திருப்பக் கூடாது.***

கர்த்தர் தமது பிள்ளைகளை ஆசீர்வதிக்க விரும்பும் போது அதை ஒருவரும் திருப்ப முடியாது. அவரது ஆசீர்வாதம் நம்முடைய பிரச்சனைகளைத் தீர்க்கும். நாம் அநேகருக்கு ஆசீர்வாதமாய் இருப்போம். கர்த்தர் நமக்குக் கொடுத்திருக்கும் கட்டளைகளை நாம் பின்பற்றும்போது அவர் நம்மை நினைத்தருளி நம்மை ஆசீர்வதிப்பார்.

எனக்கன்பான சகோதர சகோதரிகளே!

உங்கள் வாயால் ஒரு அறிக்கை செய்யுங்கள்.

நான் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்த கர்த்தரை நம்புவேன்.

ஆ கர்த்தாவே! நான் உமது கட்டளைகளைப் பின்பற்றுவேன்.

நான் உமது வார்த்தைக்குக் கீழ்ப்படிவேன்.

நான், துன்பமான நேரங்களில் உம்மை நினைவு கூறுவேன்.

ஒருவேளை நீங்கள் கடன் சுமையில் இருந்து விடுபடவோ, ஒரு பதவி உயர்வு பெறவோ, ஒரு குழந்தை பெறவோ அல்லது ஒரு வீடு கட்டவோ காத்திருக்கலாம். ஒன்றை மட்டும் நிச்சயித்துக் கொள்ளுங்கள். நீங்கள் எந்த சூழ்நிலையில் இருந்த போதிலும் **கர்த்தர் உங்களை நினைத்திருக்கிறார், அவர் ஆசீர்வதிப்பார்.** அவர் உங்களை விட்டு விலகுவதுமில்லை. உங்களைக் கைவிடுவதுமில்லை.

**பக்தன் பாடுகிறான்:**

***கர்த்தர் செய்ய நினைத்தது
தடைபட வில்லை
சகலத்தையும் நன்மையாக
செய்து முடித்தீரே***

கர்த்தர் உங்களை நினைத்திருக்கிறார். அவர் உங்கள் சூழ்நிலைகளை மாற்றுவார். தேவனை எப்போதும் துதித்துக் கொண்டேயிருங்கள்.

இயேசுவினிடத்தில் எப்போதும் நம்பிக்கை உண்டு!

## இயேசு கிறிஸ்துவே கர்த்தர்

**உன் ஊழியத்தை நிறைவேற்று.** 2 **தீமோ. 4 : 5**

தமிழகத்தில் அனைத்து கிராமங்களிலுமுள்ள தெரிந்தெடுக்கப்பட்ட **1 கோடி குடும்பங்களுக்கு** "**100 - கிராம ஊழியம்**" திட்டத்தின் மூலம் '**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**' இலவசமாக வழங்கி **இயேசுவை**அறிவித்தல்.

## மதுரை மாவட்டம் - உசிலம்பட்டி யூனியன்
## 100 - கிராம ஊழியம்

***நோக்கம்:*** **2009 மே 18** திங்கள் காலை 9 மணி முதல் **மே 22** வெள்ளி இரவு 10 மணி முடிய **மதுரை மாவட்டம் - உசிலம்பட்டி யூனியனில்** "100 - TVGM கிராமங்களில்" 10,000 வீடுகளில் இயேசுவை அறிவித்து "**வீட்டிற்கு ஒரு யோவான் சுவிசேஷப் புத்தகம்**" இலவசமாக வழங்கி வாஞ்சையுள்ள ஆத்துமாக்களின் முகவரிகளை சேகரித்து பின்தொடர்பு பணி செய்து, அருகிலுள்ள சபைகளில் இணைத்து விடுதல் ஆகும்.

**உபவாச ஜெபம் : 2009 மே 18** திங்கள் காலை **9 - 1**

**கடைசி நாள் ஜெபம் : 2009 மே 22** வெள்ளி இரவு **7 - 10** முடிய

**( 2009 மே 18 - 22 தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி )**

**உபவாச ஜெபம் நடைபெறும் இடம்**

**மாரநாதா ஜெபவீடு,**
**கவுண்டம்பட்டி ரோடு, நாடார் ஸ்கூல் எதிரில்,**
**உசிலம்பட்டி - 625 532.**
**மதுரை மாவட்டம்.**
**செல் : 98650 27950**

**நன்றி** : உதவி செய்ய முன் வந்த Pr.**இம்மானுவேல்** அவர்களுக்கு நன்றி!

**தகுதி** : ஆலயமில்லாத கிராமங்களில் 5 நாள் தங்கியிருந்து, சுவிசேஷம் அறிவித்து கிராமத்தில் சாப்பிட்டுக் கொண்டு ஊழியம் செய்ய, அர்ப்பணித்த **18** வயதுக்கு மேற்பட்ட ஆண், பெண் இருபாலரும் விண்ணப்பிக்கலாம்.

***பிரயாணப்படி :*** தமிழ்நாட்டிலிருந்து ரூ. **5** செலுத்தி, அனுமதி தபால் பெற்று வருபவர்களுக்கு போக, வர குறைந்த பஸ் கட்டணமும், உணவும் வழங்கப்படும். வேறு உதவித்தொகையோ, அன்பளிப்போ கிடையாது.

***முக்கிய அறிவிப்பு :*** 1. இது ஒரு கௌரவ, தியாக சேவையாகும்.

**எக்காரணத்தை முன்னிட்டும் நஷ்ட ஈடு வழங்கப்படமாட்டாது.**

2. இயேசு கிறிஸ்துவின் கடைசி கட்டளையை நிறைவேற்ற ஆத்தும தரிசனம் பெற்றவர்கள் மட்டும் 100 - கிராம ஊழியத்திற்கு வாருங்கள்.

***சகல தொடர்புகளுக்கும் :*** சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர், **100 - கிராமம்,** திருச்சி - 620 102. **Ph : 0 - 431 - 2607241 Cell : 94435 - 44628**

# காஞ்சிபுரம் - மதுராந்தகம் யூனியன்
# 100-கிராம ஊழியம் அறிக்கை

**THANKS: POTTER'S HANDS MINISTRY.**


48 கிராம ஊழியர்கள்

கர்த்தருடைய கிருபையால் காஞ்சிபுரம் மாவட்டம் – மதுராந்தகம் யூனியனில் 09.03.2009 திங்கள் முதல் 13.03.2009 வெள்ளி வரை **100–கிராம** ஊழியம் ஆசீர்வாதமாக நடைபெற்றது.

மதுராந்தகம் A.G.சபை **பாஸ்டர் ஏசுதாஸ்** அவர்கள் முதல் நாள், கடைசிநாள் கூடுமிடம், சிறப்பான ஆகாரம், பார்சல் செலவுகள், இனிப்பு இவைகளை பொறுப்பெடுத்துக் கொண்டு உதவி செய்தார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து 14 மாவட்டங்களைச் சேர்ந்த 48 பேர் இந்த ஊழியத்தில் கலந்து கொண்டு ஊழியம் செய்தார்கள்.

முதல் நாள் ஜெபத்தில் மதுராந்தகம் யூனியனிலுள்ள கிராமங்களின் பெயர்களை வாசித்து ஸ்தோத்திர ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இந்த ஜெபத்தில் TVGM ஸ்தாபகர் Bro.P.T.கிறிஸ்டோபர் அவர்கள் கலந்து கொண்டு ஜெபத்தில் நடத்தினார்கள். மதுராந்தகம் A.G.சபையின் உதவிப் போதகர் **எபிநேசர்** தேவசெய்தி கொடுத்தார்கள்.

இதன் பின்பு கிராம ஊழியர்களை 11 குழுவாகப் பிரித்து, ஒவ்வொரு குழுவினரும் தனித்தனியாக தாங்கள் ஊழியம் செய்யப் போகிற கிராமங்களுக்காக ஜெபித்தார்கள்.


குழுவாக ஜெபித்தல்



மதிய உணவிற்கு பின் 11 குழுவினரும் கிராமங்களுக்குள் சென்று 5 நாட்கள் தங்கியிருந்து, அங்குள்ள வீடுகளுக்கு வீட்டிற்கொரு லூக்கா சுவிசேஷப் புத்தகம் இலவசமாக கொடுத்து இயேசுவை அறிவித்தார்கள். கிராமங்களில் மொத்தம் 11503 லூக்கா சுவிசேஷப் புத்தகங்களும், 10,000 சிலுவைக்கொடிகளும் கொடுத்து ஊழியம் செய்தார்கள். ஊழியத்தின்போது சந்தித்தவர்களில் 212 புற மத நண்பர்கள் தங்கள் விலாசங்களை கொடுத்து, தபால் மூலம் வேதபாடம் அனுப்ப கேட்டனர்.

ஊழியங்களை முடித்து கடைசி நாள் மீண்டும் முன்பு கூடிய அதே இடத்தில் கிராமங்களில் கர்த்தர் தங்களை எப்படியாக பயன்படுத்தினார் என்பதை சாட்சியாகக்கூறி தேவனை மகிமைப் படுத்தினார்கள். இந்த ஜெபத்தில் மதுராந்தகம்

பவர் A.G.சபையின் பாஸ்டர் அம்மா அவர்கள் தேவசெய்தி கொடுத்து ஊழியர்களை உற்சாகப்படுத்தினார்கள். சபையின் சார்பாக ஊழியர்களுக்கு இனிப்பும், சிறப்பான ஆகாரமும் கொடுத்தார்கள். TVGM சார்பில் பிரயாணப் படி வழங்கப்பட்டது. பின்பு ஊழியர்கள் அவரவர் ஊர்களுக்கு திரும்பி சென்றனர்.

## கிராம ஊழியர்களின் சில அனுபவ சாட்சிகள்:-

**குழு:1 சகோ. மாற்கு மாரியப்பன், சாம்ராஜ், நோவா, பாபு சாலமோன்.**

**கெண்ட்ரச்சேரி** கிராமத்தில் வீடுகளில் லூக்கா புத்தகம் கொடுத்த போது, நான்கு பெரியவர்கள் இங்கே இருக்கிற எங்கள் சாமியை எங்களால் கும்பிடமுடியவில்லை. நீங்க வேறு இதைக் கொண்டு கொடுக்கிறீர்களே என்று சலித்துக் கொண்டனர். **முதுகரை** கிராமத்தில் இருவர் எங்களை புத்தகம் ஏதும் கொடுத்தால் உங்களை போலீஸ் நிலையத்தில் கொண்டு போய் விடுவேன் என்று மிரட்டினர். அப்போது அந்த வழியே சைக்கிளில் சென்ற 2 பேர் அவர்களைப் பார்த்து, இவர்கள் புத்தகம் கொடுத்தால் கொடுத்து விட்டு போகட்டும் அதனால் உங்களுக்கு என்ன வந்தது என்று கூறி அவர்களை தடை செய்தார்கள். நாங்கள் தொடர்ந்து ஊழியம் செய்தோம். ஒரு பையன் ‘ஏய் யாரும் இந்த புத்தகத்தை வாங்கி படிக்காதீர்கள்’ என்று கத்திக் கொண்டு போனான். சிலர் லூக்கா புத்தகத்தை தெருவிலேயே கிழித்துப் போட்டார்கள். மொத்தம் 997 சுவிசேஷப் புத்தகங்களும் 910 சிலுவைக் கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:2 சகோதரி வசந்தா ஸ்டீபன், அன்னக்கிளி, கிளமெண்ட்ஸ்மேரி, ஜெபமணி,**

**ஜமீன்எண்டத்துார்** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் லூக்கா புத்தகம் கொடுத்தோம். யாவரும் ஆர்வமாக வாங்கிக் கொண்டார்கள். அநேக வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். **ஓலவெட்டி** கிராமத்தில் செய்வினையால் பாதிக்கப்பட்டு, நடக்க முடியாமல் படித்திருந்த ஒரு ஆசிரியருக்காக ஜெபித்தோம். அவர் எழுந்து நடந்து வாசல் வரை வந்து எங்களை வழியனுப்பினார். 959 சுவிசேஷப் புத்தகங்களும், 900 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:3 சகோ.ஆரியப்பன், யோசுவா, சூசைமாணிக்கம், ஸ்டான்லி.**

**காவாத்துார், சீர்வாடி, பேக்கரணை** கிராமங்களில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்து, நற்செய்தியை அறிவித்தோம். யாவரும் ஆர்வத்துடன் கேட்டனர். அநேகருக்காக ஜெபித்தோம். **வீராணக்குன்னம்** கிராமத்தில் சேகர் என்பவர் எங்களைத் தடுத்து, ஏன் உங்கள் மதத்தை பரப்புகிறீர்கள். எங்கள் கிராமத்தில் புத்தகம் எதுவும் கொடுக்கக்கூடாது. வந்த வழியே போய்விடுங்கள். இல்லாவிட்டால் போலீசில் பிடித்துக் கொடுத்து விடுவேன் என்று மிரட்டினார். நாங்கள் அங்கிருந்து வேறு கிராமத்திற்கு சென்றோம். வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். அசுத்தஆவி பிடித்திருந்தவர்களை கர்த்தர் விடுதலையாக்கினார். 1232 சுவிசேஷப் புத்தகங்களும், 905 சிலுவைக்கொடிகளும் கொடுத்தோம்.

**குழு:4 சகோதரி கஸ்துாரி, மேரிமீனா, ரூத் பகவதி, மரியாள்.**

**மாரிபுத்துார்** கிராமத்திற்கு செல்லும் போது ஒரு பிராமண பூசாரி எங்களிடம், ‘போய் எல்லாருக்கும் சந்தோஷமாக

புத்தகங்களை கொடுங்கள்' என்று சொன்னார். நாங்கள் சந்தோஷத்துடன் சென்று எல்லா வீட்டிற்கும் லூக்கா புத்தகம் கொடுத்து, இயேசுவைப் பற்றி சொன்னோம். யாவரும் வாஞ்சையோடு கேட்டார்கள். வியாதியஸ்தர்களுக்காக ஜெபித்தோம். 950 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு: 5</u> சகோதரி மேரி செல்லாபாய், மணியம்மாள், லீதியாள், தேவகிருபை, முத்துலெட்சுமி.**

**அருங்குளம்** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் சென்று லூக்கா புத்தகம் கொடுத்தோம். யாரும் வேண்டாமென்று சொல்லாமல் வாஞ்சையுடன் வாங்கினர். வாலிபர்களும் உற்சாகமாக வாங்கி வாசித்தார்கள். அநேக வியாதியஸ்தர் களுக்காகவும், மனநிலை சரியில்லாத வர்களுக்காகவும் ஜெபித்தோம். 1030 சுவிசேஷப் புத்தகங்கள், 925 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு: 6</u> சகோதரி எஸ்தர், கிருபா பழனியம்மாள், பிச்சையம்மாள், தேவபாக்கியம், அந்தோணிமேரி.**

**சோத்துப்பாக்கம், சிலாவட்டம்** கிராமங்களுக்கு சென்று சுவிசேஷம் அறிவித்து, லூக்கா புத்தகம் கொடுத்து கொண்டு வரும்போது, சிலாவட்டம் குடோன் பகுதியில் சிலர் எங்களைப் பார்த்து இந்த பொம்பளைங்க நம்ம பிள்ளைகளையெல்லாம் இயேசுவிடம் சேர்த்து கெடுத்து விடப் போகிறார்கள். இப்படி வந்து சுற்றித் திரிவதற்குப் பதில் எங்காவது வேலை செய்து பிழைக்கலாம். உங்களுக்கு குடும்பம், பிள்ளைகள் இல்லையா என்று இழிவாக பேசினார்கள். நாங்கள் பதில் ஏதும் சொல்லாமல் அங்கிருந்து மருவத்தூர் கிராமத்திற்கு சென்றோம். 1100 சுவிசேஷப் புத்தகங்கள், 900சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு: 7</u> பாஸ்டர் ஆல்வின், சகோ. ஜெபமலைநாதன், ராமலிங்கம், தாவீது தங்கவேல்.**

**மெய்யூர்** என்ற கிராமத்தில் சத்தியத்தை அறிவித்து சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, ராஜா என்பவர் கிறிஸ்தவ மார்க்கத்தைப் பற்றிய அவரின் சந்தேகங்களை எங்களிடம் கேட்டு தெளிவாக அறிந்து கொண்டு, **இயேசுவே மெய்யான கடவுள்** என்பதை ஏற்றுக் கொண்டார். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 950 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு: 8</u> சகோதரி மரியம்மாள், சலோமி சம்மனசு, எஸ்தர்பேபி, ஆரோக்கியமேரி**

**மேட்டுப்பாளையம்** கிராமத்தில் சாமியாடிக் கொண்டிருந்த காத்தவராயன் என்பவருக்காக ஜெபித்தோம். இவர் இயேசுவை ஏற்றுக் கொண்டு இப்போது பின்மாற்றத்திலிருக்கிறார். இவருக்கு ஜெபித்தபோது மீண்டும் சபைக்கு செல்வேன் என்று கூறினார். கக்கலப் பேட்டை கிராமத்தில் திலகவதி என்பவருக்கு சுவிசேஷம் கூறியபோது அவரும் ஏற்றுக்கொண்டு கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்தார். 1034 சுவிசேஷப் புத்தகங்கள், 900 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

**<u>குழு: 9</u> சகோதரி டோரா லாசர், ஷீலா, விமலா, செலின், சாந்தி.**

**புதுப்பட்டு** ஊராட்சியிலுள்ள வீடுகளில் சுவிசேஷப் புத்தகம் கொடுத்த போது, ஜனங்கள் ஆர்வமாக வாங்கிக் கொண்டு சத்தியத்தைக் கேட்டார்கள். குப்பம்மா என்ற பெண்ணிடம் இயேசுவைப் பற்றி சொன்னபோது, அவர் உங்க சாமியை நாங்க கும்பிட்டா உடனே செத்துபோவோம். எங்கசாமியை கும்பிட்டா உயிர் வாழ்வோம். நான் ஒன்று செய்கிறேன் பாகுபாடில்லாமல் இரண்டு சாமியையும் கும்பிடுகிறேன்

என்றார். இவருக்கு இன்னும் மெய்யான தெய்வம் பற்றிக் கூறி ஜெபம் செய்துவிட்டு வந்தோம். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 920 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

***குழு:10* சகோதரி கிரேஸ் பத்மா, அன்னாள், ஜோதிமணி, லூயிஸ்.**

**மங்கலம்** ஊராட்சியிலுள்ள கிராமங்களில் லூக்கா புத்தகம் கொடுத்தோம். **ஆலஞ்சேரி** கிராமத்தில் நாகராஜ் என்பவருக்கு 11 வருடம் கழித்து ஒரு ஆண் குழந்தை பிறந்து $1\frac{1}{2}$வயது ஆகிறது. இந்த பையனுக்கு உடம்பில் கட்டிகள் மாறிமாறி வருவதாகக் கூறி ஜெபிக்கக் கேட்டார்கள். இவருக்கு சுவிசேஷத்தைக் கூறி, குழந்தைக்காக ஜெபித்தோம். இன்னும் சில கிராமங் களிலும் ஊழியம் செய்து கர்த்தரை மகிமைப்படுத்தினோம். 1141 சுவிசேஷப் புத்தகங்கள், 1000 சிலுவைக்கொடிகள் கொடுத்தோம்.

***குழு:11* சகோ.இஸ்ரவேல், எபிநேசர், ஸ்டீபன்ராஜ், அந்தோணி, இஸ்தாக்கி.**

**பூதூர்** ஊராட்சியை சுற்றியுள்ள 10 கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்து, லூக்கா புத்தகம் கொடுத்தோம். நாங்கள் தங்கியிருந்த கிராமத்தில் கள்ளச்சாராயம் விற்பனை செய்கிறார்கள். நாங்கள் அது தெரியாமல் அங்கு ஊழியம் செய்தபோது, சில குடிகாரர்கள் எங்களை வழிமறித்து 5 ரூபாய் தா, 10 ரூபாய் தா என்று என்று கேட்டு வற்புறுத்தினார்கள். எங்களிடம் இயேசு சாமி மட்டும் தான் உண்டு என்று சொல்லி விட்டு தப்பிச் சென்றோம். மற்ற கிராமங்களில் மக்கள் வாஞ்சையோடு கேட்டு புத்தகங்களைப் பெற்றுக் கொண்டார்கள். 1000 சுவிசேஷப் புத்தகங்கள், 780 சிலுவைக் கொடிகள் கொடுத்தோம்.

**தேவனுக்கே மகிமை!**

## இயேசுவை விரும்புவோர் முகாம்



கர்த்தருடைய கிருபையினால் புதுப்பாளையம் யூனியனில் 21.03.2009 அன்று செங்கம் ALC அடைக்கல நாதர் ஆலயத்தில் **இயேசுவை விரும்புவோர் முகாம்** நடைபெற்றது.

இம்முகாமில் 5 பேர் மிகுந்த ஆவலுடன் கலந்துகொண்டார்கள். இவர்களுக்கு **இயேசுவே மெய்யான தெய்வம்** என்பதை வசன ஆதாரத்துடன் கூறி, ஒவ்வொரு வாரமும் சபைக்கு வரும் படி ஆலோசனை வழங்கப்பட்டது. அவர்களும் அதை ஏற்றுக் கொண்டனர். அவர்களுடைய பிரச்சனைகளைக் கூறி ஜெபிக்கக் கேட்டார்கள். பாரத்தோடு ஜெபம் ஏறெடுக்கப்பட்டது.சகோ. R. **தாஸ்** Rtd.H.M. அவர்கள் தனது சாட்சியைக் கூறி, ஜெபித்து உற்சாகப்படுத்தினார்கள். மதிய உணவும் வழங்கினார்கள்.

**தேவனுக்கே மகிமை!**

## 2009 மே மாத முகாம்

யூனியன் : திருச்சுளி
நாள் : 23.05.2009 சனி
நேரம் : காலை 9 மணி

**கூடுமிடம்**

**பாஸ்டர்..ஜீவானந்தம்**
**நியூ இந்தியா A.G.சர்ச்,**
**தமிழ்பாடி ரோடு,**
**ரேசன் கடை அருகில்.**
**திருச்சுளி – 626 129.**
**விருதுநகர் மாவட்டம்.**
**போன்: 9952556826**

## புறமத நண்பர்கள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. **சகோதரி தேவகுமாரி, விருதுநகர்.**
நாங்கள் கட்டிய வீடு பாதியிலே நிற்கிறது என்று ஜெபித்தேன். தளம் போட்டு குடிபோக கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார்.

2. **சகோதரி பாப்பா, விருதுநகர்.**
என் கண் ஆப்பரேஷன் செய்து பார்வை தெரியாமலிருந்தேன். உபா.34:7 வசனத்தை வைத்து விசுவாசத்தோடு ஜெபித்தேன். கர்த்தர் எனக்கு நல்ல கண் பார்வையைத் தந்தார்.

3. **சகோதரி சாந்தி, புதுக்கோட்டை,**
நான் 2 வருடங்களுக்கு முன்பு வீட்டிற்கு மின்சாரம் கிடைக்கவும், கணவருக்கு கட்டிட வேலை கான்ட்ரக்ட் கிடைக்கவும், மகனின் 10ம் வகுப்பு தேர்விற்காகவும் ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன்.கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு அற்புதங்கள் செய்தார்.

4. **சகோதரி தமிழரசி, உத்தண்டியூர்.**
என் சகோதரியின் கணவருக்கு காலிலுள்ள புண் ஆற வேண்டுமென்று ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். இப்பொழுது புண் ஆறிவிட்டது.

5. **சகோதரி முருவாத்தம்மாள், தி.மலை**
என் பேத்தியின் திருமணம் நடைபெற ஜெபிக்கும்படி கடிதம் எழுதியிருந்தேன். திருமணம் ஆசீர்வாதமாக நடைபெற கர்த்தர் உதவி செய்தார்.

6. **சகோதரி செல்வி, தூத்துக்குடி.**
பெப்ரவரி மாதத்தில் வீடு கட்ட நிலம் வாங்கும்படி ஜெபிக்க கடிதம் எழுதினேன். மார்ச் மாதத்தில் நிலம் வாங்க கர்த்தர் உதவி செய்தார்.

7. **சகோதரி யசோதா, நாமக்கல்.**
என் படிப்பிற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். 82% மதிப்பெண்கள் எடுத்து வெற்றி பெற கர்த்தர் கிருபை செய்தார்.

8. **சகோ.முருகன், ராஜஸ்தான்.**
என் தங்கையின் திருமணத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதியிருந்தேன். கர்த்தர் பணத்தேவைகளை சந்தித்து தந்து, திருமணத்தை ஆசீர்வாதமாக நடத்தித் தந்தார்.

9. **சகோதரி அனுசுயா, தூத்துக்குடி.**
என் மகளின் குழந்தை பாக்கியத்திற்காக ஜெபிக்க கடிதம் எழுதினேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு குழந்தை பாக்கியத்தைக் கொடுத்தார்.

10. **சகோதரி தேவிகா, தஞ்சாவூர்.**
நான் M.Com படிப்பை தொடர அநேக தடைகள் இருந்தது. கர்த்தர் தடைகளை மாற்றி படிக்க கிருபை செய்தார்.

## விசுவாசிகள் எழுதிய சாட்சிகளின் சில வரிகள்

1. **சகோ.அன்பழகன், வேலூர்.**
சகோதரி கலைவாணி அவர்களுக்கு அதிக நெஞ்சுவலி ஏற்பட்டு, மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்தார். சுகம் கிடைக்கும்படி 100–கிராம ஊழியத்திற்கு கடிதம் எழுதினேன். கர்த்தர் ஜெபத்தைக் கேட்டு சகோதரிக்கு பூரண சுகத்தைக் கொடுத்தார்.

2. **சகோ.துரைசாமி, நாமக்கல்.**
தாங்கள் அனுப்பிய 100–கிராம ஊழியம் பத்திரிக்கையை படித்தேன். அதிலுள்ள ஒவ்வொரு வார்த்தையும் உடைந்து போயிருந்த என் உள்ளத்திற்கு ஆறுதலாக இருந்தது.

# திருநெல்வேலி மாவட்டம் - கோடாவிளை டாக்டர் லாரன்ஸ் ஹாலில் நடைபெறும் துதி ஆராதனை

கர்த்தருடைய கிருபையினால் திருநெல்வேலி – கோடாவிளை டாக்டர் லாரன்ஸ் ஹாலில் தினமும் துதி ஆராதனை மாலை 7.30 முதல் 8.30 வரை நடைபெறுகிறது. சுற்றுவட்டாரத்திலுள்ள அநேகர் இந்த துதிஆராதனையில் கலந்து கொண்டு தேவனுடைய ஆசீர்வாதத்தை பெற்று வருகிறார்கள். கடந்த துதிஆராதனையில் தேவன் செய்த அற்புதத்தை தேவ நாம மகிமைக்கென்று இங்கே பிரசுரிக்கிறோம். வாசித்து தேவாதி தேவனை மகிமைப்படுத்துங்கள்.

ஒரு சிறுவன் மிகவும் காய்ச்சலாக துதி ஆராதனைக்கு வந்தான். ஆராதனை நடக்கும்போதே கர்த்தர் பூரண சுகத்தைக் கொடுத்தார்.

அன்னபாப்பா என்ற சகோதரி வயிற்றுவலியால் துதிஆராதனையில் கலந்து கொண்டார். அந்த நிமிடமே கர்த்தர் அற்புத சுகத்தைக் கொடுத்தார்.

உப்பு வியாதியால் பாதிக்கப்பட்டு டாக்டர் இரத்தம் மாற்ற வேண்டும் என்று சொன்ன குணசீலன் என்ற சகோதரனுக்கு கர்த்தர் துதி ஆராதனையில் விடுதலை கொடுத்தார். மட்டுமல்ல அவர் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார். **தேவனுக்கே மகிமை.**

**டாக்டர் லாரன்ஸ் ஹாலில்** நடைபெறும் ஊழியங்களுக்காக ஜெபிக்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## TVGM 12 மணி நேர துதி ஆராதனை & வாக்குத்தத்த தேவசெய்தி

**நாள் :** 01.05.2009 வெள்ளிக் கிழமை

**துதி ஆராதனை நேரம் :** 7AM-7PM

**வாக்குத்தத்த செய்தி :** 7PM-8PM

**இடம்**

**TVGM** தலைமை அலுவலகம்
100 – கிராமம்,
திருச்சி – 620 102.



## நடு இரவு ஜெபம்
## 2009 மே 31 இரவு 7 - 12

கர்த்தருடைய கிருபையினால் 2009 மார்ச் 1 ஞாயிறு அன்று காலை 7.00 முதல் மாலை 7.00 வரை துதி ஆராதனை நடைபெற்றது.

மாலையில் நடைபெற்ற வாக்குத்தத்தக் கூட்டத்தில் **பாஸ்டர் ஆசீர்வாதம்** அவர்கள் குடும்பமாக கலந்து கொண்டு, தேவசெய்தியை பகிர்ந்து கொண்டார்கள். **தேவனுக்கே மகிமை!**

## சென்னையில் கிறிஸ்தவ தலைவர்களை நாங்கள் சந்தித்தது பற்றி . . .


Pr. விசுவாசம் அவர்களோடு சகோ.P.T.கிறிஸ்டோபர் & சகோ. ஸ்டீபன் கிற்ஸ்டோபர்


ACA சபை – பல்லாவரம்

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளே,

கர்த்தருடைய கிருபையால் நாங்கள் சென்னையில் சில கிறிஸ்தவ தலைவர்களை சந்திக்க முடிந்தது. நானும் என் தந்தையாரும் பல்லாவரம் ACA ஆலயத்தில் பேசினோம். பல்லாவரம் ACA ஆலயத்தின் மூத்த போதகரான பாஸ்டர்.விசுவாசம் அவர்களை சந்திக்க எங்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அவரது ஊழியப் பாதையில் தேவன் அவரை எவ்வாறு வழி நடத்துகிறார் என்பதை அவர் பகிர்ந்து கொண்டார். மேலும் அவரது இஸ்ரவேல் நாட்டுப் பயணம் குறித்தும் அது அவரது ஊழியத்தில் எவ்வளவு பொருளாதார ஆசீர்வாதமாய் இருந்தது என்பது குறித்தும் பகிர்ந்து கொண்டார்.


ACA சபையில் சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபர்

அடுத்து நாங்கள் புரசவாக்கம் ACA சபையின் தலைமைப் போதகராக இருக்கும் பாஸ்டர். சாம்சுந்தரம் அவர்களை சந்தித்தோம். அவரோடு குறைவான நேரமே இருந்தோம். தனது ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் எனது தந்தையோடு அவருக்கிருந்த உறவை அவர் பகிர்ந்து கொண்டார். அவரது ஆயலத்தில் 2009 மே 24ம் தேதி பேசுவதற்கு ஒரு வாய்ப்பினையும் என் தந்தைக்கு அவர் கொடுத்துள்ளார்.

கோடம்பாக்கம் A.G. சபையில் தலைமைப் போதகராக உள்ள பாஸ்டர். சார்லஸ் ஆரோன் அவர்களையும் அவரது மகனையும் சந்தித்தோம். அவர்களோடும் மிகவும் குறைவான நேரமே இருந்தோம். ஆனால், புதிய தலைமைத்துவப் பயிற்சி திட்டத்திற்காக பாஸ்டர் அவர்களை ஜெபிக்கும்படி கேட்டுக்கொண்டோம்.



இறுதியாக **சுவிசேஷகர் சாம் ஜெபத்துரை** அவர்களை நாங்கள் சந்தித்தோம். அவரோடு செலவிட்ட நேரம் 1 மணி நேரத்திற்கு மேல் நீடித்தது. அவரது ஊழியத்தின் வளர்ச்சி குறித்தும் அதில் பட்ட பாடுகள் குறித்தும் அவர் பகிர்ந்து கொண்டார். 3 ஆண்டுகளில் 50 ஆலயங்கள் நிறுவ தேவன் அவருக்கு எப்படி உதவி செய்தார் என்பதையும் அவர் சொன்னார். எங்களது ஊழியத்தின் துவக்கம் முதல் அவர் எவ்வாறு எங்களது ஊழியத்தில் உறவு கொண்டிருந்தார் என்பதையும் சொன்னார். மேலும் புதிய தலைமைத்துவ பயிற்சி திடடத்திற்காகவும் ஒரு நல்ல ஜெபம் ஏறெடுத்தார்.

இந்த எல்லா சிறந்த தேவ மனிதர்களிடமும் நாங்கள் செலவிட்ட நேரம் ஆசீர்வாதமாக இருந்தது. ஊழியப் பாதையிலே அவர்களது சொந்த அனுபவத்தின் மூலம் அவர்கள் சொன்ன ஆலோசனைகளை நாங்கள் பெற்றுக் கொள்ள முடிந்தது. ***தேவனுக்கே மகிமை!*** — **ஸ்டீபன் கிறிஸ்டோபர்.**

## கிறிஸ்தவ வட்டாரத்தில் சுவிசேஷமும் துன்பப்படுதலும்.

**கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!**

### *நாம் எவ்வாறு சுவிசேஷத்தை அறிவிக்கிறோம்?*

சுவிசேஷமானது இடத்துக்குத் தக்கவாறு ஒரு குறிப்பிட்ட பிரிவினருக்கு அளிக்கப்பட வேண்டும். இதன்படி சுவிசேஷமானது, மாறுதல் ஏதுமின்றி ஒரு குறிப்பிட்ட நாடு அல்லது மதத்தைச் சார்ந்தோருக்கு புரியும் வகையில் சொல்லப்பட வேண்டும். வேறு வார்த்தைகளில் சொன்னால் இந்திய சூழ்நிலையில், சுவிசேஷமானது இந்தியத் தன்மை கொண்டதாக ஆக்கப்பட வேண்டும். அது ஒரு மேலை நாட்டு மதம் என்பது போலக் காணப்படலாகாது.

சுவிசேஷமானது அசுசிப்படுத்தப்படலாகாது. இதன்படி சுவிசேஷமானது சுத்தமானதாக இருக்க வேண்டும். வேறு வகையிலான தனிப்பட்ட அல்லது மதம் சார்ந்த கருத்துக்களால் அது அசுசிப்படுத்தப் படலாகாது.

சுவிசேஷத்தின் செய்தியானது ஒரு குறிப்பிட்ட அளவுக்கு அனைவருக்கும் தெரியத்தக்கதாக ஆக்கப்பட வேண்டும். பொது மக்கள் அதனைப் புரிந்து கொள்ளக் கூடிய வகையில் அது சொல்லப்பட வேண்டும்.

சுவிசேஷத்தின் செய்தியானது கேட்பவரை மாற்றும் தன்மை உடையதாக இருக்க வேண்டியது அவசியம். ஒருவனின் உள்ளார்ந்த மனிதனை மாற்றக் கூடிய வகையில் ஒவ்வொரு முறையும் அதே உணர்ச்சியுடனும் உத்வேகத்துடனும் சுவிசேஷத்தின் செய்தி சொல்லப்பட வேண்டும்.

சுவிசேஷத்தை ஒருவர் நாடித் தேடும்படியாக நாம் கிறிஸ்துவை பிரதிபலிக்கிறவர்களாக இருக்க வேண்டும். நமது சாட்சியையும் தேவனுக்கேற்ற வாழ்க்கையையும் மற்றவர்கள் கண்டு நம்மிடம் வரும் வகையில் நமது வாழ்க்கையானது கிறிஸ்துவைப் பிரதிபலிக்க வேண்டும்.

சுவிசேஷ செய்தியானது ஒருவித நடுநிலை உள்ளதாக இருக்க வேண்டும். சுவிசேஷம் எப்படி உள்ளதோ அப்படியே சொல்லப்பட வேண்டும். அதனுடன் ஒன்றைக் கூட்டவும் கூடாது, குறைக்கவும் கூடாது.

சுவிசேஷத்தைச் சொல்வது என்பது ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய செயலாகும். சுவிசேஷம் அறிவிப்பது ஒரு முறை நிகழக்கூடியதாக மட்டும் இல்லாமல் ஒரு கிறிஸ்தவனின் ஒவ்வொரு நாளின் செயலாக இருக்க வேண்டும்.

சுவிசேஷத்தை சரியான முறையில் நாம் கொடுக்கும்போது அதனால் வரக்கூடிய துன்பமானது தேவனுடைய ராஜ்யத்தை விரிவடையச் செய்யும். அது நமது வாழ்க்கையில் ஒரு ஆசீர்வாதமாக இருக்கும். கிறிஸ்தவர்களாக நாம் துன்பபப்படுதலை எதிர்பார்த்திருக்க வேண்டும். அதைக் கையாள அதிக ஆயத்தத்துடனும் இருக்க வேண்டும். துன்பப்படுதல் தவிர்க்க முடியாதது.

**மத்தேயு 5:10**ல் நாம் வாசிக்கிறோம் **“நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள், பரலோக ராஜ்யம் அவர்களுடையது”** என்று. துன்பப்படுதல் தேவனுடைய ராஜ்யத்தை மிக அதிக வேகத்துடன் விரிவடையச் செய்கிறது. **அப்போஸ்தலர் 8:1**ல் நாம் வாசிக்கிறோம். **“அக்காலத்திலே எருசலேமிலுள்ள சபைக்கு மிகுந்த துன்பம் உண்டாயிற்று. அப்போஸ்தலர் தவிர, மற்ற யாவரும் யூதேயா, சமாரியா தேசங்களில் சிதறப்பட்டுப் போனார்கள்”** என. **மத்தேயு 10:23**ல் மேலும் நாம் பார்க்கிறோம் **“ஒரு பட்டணத்தில் உங்களைத் துன்பப்படுத்தினால் மறு பட்டணத்திற்கு ஓடிப்போங்கள்”** என. துன்பப்படுதலின் காரணமாக சிதறி இருப்பதன் மூலம் சுவிசேஷம் வெவ்வேறு பகுதிகளில் பரவுகிறது. மிக அதிக வேகமாகவும் பரவுகிறது.

துன்பப்படுதலையும் கஷ்டங்களையும் நாம் சகித்துக் கொள்ள வேண்டும். **1கொரி 4:12** ல் பார்க்கிறோம். **எங்கள் கைகளினாலே வேலை செய்து பாடுபடுகிறோம். வையப்பட்டு, ஆசீர்வதிக்கப்படுகிறோம். துன்பப்பட்டு சகிக்கிறோம்.** மேலும் **2கொரி 4:9** கூறுகிறது **“துன்பப்படுத்தப்பட்டும் கைவிடப்படுகிறதில்லை; கீழே தள்ளப்பட்டும் மடிந்து போகிறதில்லை.”** எனவே துன்பப்படுதலின் மூலம் தேவனுடைய ராஜ்யம் விரிவடைகிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். துன்பப்படுதலினால் கிறிஸ்தவமானது மரித்துப் போயிற்று என்று சரித்திரத்தில் ஒரு கதை கூட ஒருபோதும் இருந்தது கிடையாது. எனவே துன்பத்தை சகித்துக் கொள்ள பலம் வேண்டும் என நாம் தேவனைக் கேட்க வேண்டும்.

**தேவனுக்கே மகிமை!** **— ஸ்டீபன் கிறிஸ்டோபர்.**

**<u>தினமும் ஒரு நிமிடமாவது ஜெபியுங்கள்.</u>**

**"<u>நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது</u>". யாக்.** 5:16

# தினசரி ஜெபக்குறிப்புகள்

**திங்கள்:** 2009 மே 1 ம் தேதி நடைபெறும் துதிஆராதனைக்காகவும், **சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபரின்** 6வது வருட துவக்க நாள் ஸ்தோத்திரக் கூட்டத்திற்காகவும் அத்துடன் TVGM நிர்வாக அலுவலக திறப்பு விழா மற்றும் சிறுவர் இல்ல கட்டடம் அஸ்திபாரம் போடப்படவும் ஜெபியுங்கள்.

**செவ்வாய்:** 2009 மே 24ம் தேதி ஞாயிறு ஆராதனையில் சென்னை **அப்போஸ்தல கிறிஸ்தவ சபையில்** TVGM ஸ்தாபகர் பி.டி. கிறிஸ்டோபர் அவர்களுக்கு தேவ செய்தியளிக்க **பாஸ்டர் சாம் சுந்தரம் ஐயா** வாய்ப்பளித்துள்ளார்கள். தேவாதி தேவனைத் துதியுங்கள். கர்த்தருடைய வார்த்தை மட்டும் வெளிப்படவும், தேவன் மகிமைப்படவும் ஜெபியுங்கள்.

**புதன்:** TVGM **அறிமுகப்பணி அலுவலகம்** அமைக்க நாகர்கோவில் வெள்ளமடம் அருகிலுள்ள **கிறிஸ்து நகரில்** ஒரு பிளாட் நிலம் 20% தள்ளுபடியுடன் விலைக்கு வாங்க ரூ.10000 டோக்கனாக கொடுக்க கர்த்தர் கிருபை செய்தார். மீதியுள்ள ரூ.9,90,000 ஆறு மாதத்திற்குள் கொடுக்கப்பட்டு பத்திரம் எழுத ஜெபியுங்கள். இந்த இடத்தை அறிமுகம் செய்து வைத்து, நிலத்தில் வந்து ஜெபித்த சகோதரி கிரேஸ் ஜஸ்டின் மற்றும் ஆண்டான்குளம் திரு. சாம் மோகன் அவர்களுக்காகவும் தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**வியாழன்:** TVGM **கிறிஸ்தவ தலைமைத்துவ பயிற்சி மையம்** பெயர் உறுதி செய்யப்பட்டு, டிரஸ்ட் பதிவு செய்யப்படவும், முதல் கட்டமாக 5 ஏக்கர் நிலம் குக்கிராமத்தில் வாங்க ரூ.12 லட்சம் கர்த்தர் பரத்திலிருந்து கட்டளையிடவும், சகோ.ஸ்டீபன் கிறிஸ்டோபருக்கு கர்த்தர் கொடுத்த தரிசனம் ஏற்ற காலத்தில் நிறைவேற ஜெபியுங்கள்.

**வெள்ளி:** TVGM **தரிசனமுகாம்** அநேக மாவட்டங்களிலும், தேசங்களிலும் நடைபெற ஜெபியுங்கள். குறிப்பாக இந்த ஆண்டு சிங்கப்பூர் லேவியர் முகாமில் ஆத்தும ஆதாயம் பற்றி தேவசெய்தியளிக்க வாய்ப்பளித்த பாஸ்டர் ஜோசப் ஜெபமணி மற்றும் 6வது ஆண்டு விழாவில் செய்தியளிக்க வாய்ப்பளித்த பாஸ்டர் விக்கி (நியூசிலாந்து) அவர்களுக்காக தேவாதி தேவனைத் துதியுங்கள்.

**சனி:** TVGM ஊழியங்களுக்காக ஜெபிக்கிற, கொடுக்கிற, உழைக்கிற மக்கள் மற்றும் 100–கிராம ஊழியத்தில் சேவை செய்கிற தன்னார்வத் தொண்டர்கள், நாகர்கோவில் கிளை அலுவலக சகோதரிகள், குண்டல் சிறுவர் இல்லம், தலைமை அலுவலக ஊழியர்களுக்காகவும் ஜெபியுங்கள்.

**ஞாயிறு :** உலகமெங்கிலும் நடைபெறும் சகலவிதமான ஊழியங்களுக்காக ஜெபியுங்கள்.

## TVGM அறிமுகப்பணி அலுவலகம்
## ஊழிய அறிக்கை

கர்த்தருடைய பெரிதான கிருபையினால் மார்ச் மாத ஊழியங்களை கர்த்தர் ஆசீர்வதித்தார்.

பல நாட்களாக 100–கிராம ஊழிய தரிசன முகாம் ஒன்று நாகர்கோவிலில் நடத்த வேண்டுமென ஜெபித்து வந்தோம். அதின்படி 2009 ஏப்ரல் 4ம் தேதி சி.எஸ்.ஐ. பிலிப்ஸ் புரம் பாஸ்டரேட் சபையில் நடத்துவதற்கு கர்த்தர் கிருபை செய்தார். அதற்கான ஆயத்தங்களைச் செய்ய அநேகருடைய உதவி, ஒத்துழைப்புகளை கர்த்தர் தந்தார்.

சிங்கப்பூரில் வேலைபார்க்கும் ஒரு சகோதரன் தன்னுடைய சொந்த கிராமங்களில் இயேசுவை அறிவித்து சுவிசேஷ ஊழியம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். அதின்படி அவரது சொந்த ஊரான சங்கரன்புதுாரிலும், அதைச் சுற்றியுள்ள 7 கிராமங்களிலும் நமது அறிமுகப் பணி அலுவலக சகோதரிகள் அனைவரும் சுவிசேஷ ஊழியத்திற்கு வந்து செல்லும் 4 தாய்மார்களும் சுவிசேஷ ஊழியம் செய்ய போகின்றோம். கர்த்தர் திறந்த வாசலை தர உங்கள் யாவரின் ஜெப உதவியும் தேவை. ஜெபமே ஜெயம். தேவனுக்கே மகிமை!

கிறிஸ்துவின் பணியில்,
**ஷோபனா இவாஞ்சலின்,**

**5 / 3A** கிரவுண் தெரு,
வாத்தியார் விளை,
நாகர்கோவில் – 629 001.
**செல் : 98658 26424 போன் : 04652- 277251.**

## கர்த்தரால் ஏவப்படுபவர்கள் TVGM ஊழியங்களுக்கு டிராப்ட் , செக் எடுத்து அனுப்ப வேண்டிய முறை

**TAMIL VILLAGE GOSPEL MISSION (100-** கிராம ஊழியம், ஜெபவீடு)
**T.V.G.M. SOCIAL SERVICE** (சிறுவர் இல்லம், ஏழைகளுக்கு உதவி)
**T.V.G.M. PUBLICATION** ( பத்திரிக்கை சந்தா, அச்சகம் அமைக்க)

ஸ்தாபனத்தின் பெயரில் டிராப்ட் எடுக்க முடியாவிட்டால் தயவுசெய்து
**MR. STEPHEN CHRISTOPHER, SB 12491010 18538 CANARA BANK,**
**Code : 1249 Puthur Branch, TRICHY, PIN - 620 017, Tamil Nadu.**
**என்ற பெயரில் டிராப்ட் எடுத்து, கடைசி பக்கமுள்ள TVGM தலைமை அலுவலக முகவரிக்கு நோக்கத்தையும் உங்கள் முழு முகவரி மற்றும் தொலைபேசி எண்ணை குறிப்பிட்டு அனுப்பி உதவுங்கள்.**
**எங்கள் Email: 100village@tvgm.org- மூலம்**
**நீங்கள் காணிக்கை அனுப்பியுள்ள விபரத்தை தெரியப்படுத்துங்கள்.**

Owned by TVGM Publication Trust and Published by Stephen Christopher from TVGM Publication Trust 4/274 Hundred village, Somarasampettai, Trichy - 620 102 printed by him at TVGM Publication Printers, C/o. TVGM Publication Trust, 4 /274 Hundred Village, Somarasampettai, Trichy 620102.

**Editor : Mr. Stephen Christopher**

POSTAL REGISTRATION NUMBER :TRY / 013 / 2009 - 2011
Posting Date 25th at H.P.O. Trichy.

**Return Request**
TVGM Publication Trust
4/274, Hundred Village,
Somarasampettai,
Trichy - 620 102. India.

## TVGM சிறுவர் இல்லம்

2009 மார்ச் மாதம் குடும்பமாக TVGMசிறுவர் இல்லப் பிள்ளைகளை நேரடியாக பார்வையிட்டு உணவளித்த சகோ. டேனியல் ( ரிலையன்ஸ் லைப் இன்சூரன்ஸ் ), சகோ. ஆரோக்கியராஜ், Sis. பூரணலட்சுமி, மற்றும் இனிப்பு வழங்கிய Sis.அனுசுயா, துறையூர் பாஸ்டர் ஜேம்ஸ் மூலம் தக்காளி வழங்கிய சகோ. தியாகராஜ் மற்றும் அரிசி வழங்கிய சகோ.ஜேம்ஸ் (கறம்பக்குடி ) அவர்களுக்கும் நன்றி.





**TVGM தலைமை அலுவலக முகவரி**

ஜெப உதவி,காணிக்கை மற்றும் சகல தொடர்புகளுக்கும்:-

MR.STEPHEN CHRISTOPHER,
CHIEF EXECUTIVE OFFICER
**TAMIL VILLAGE GOSPEL MISSION**
100- VILLAGE ( Veeranginallur Road )
SOMARASAMPETTAI,(Hospital Stop)
TRICHY - 620 102. TAMIL NADU, INDIA.

STD Ph : 0-431 - 2607241
FAX : 0-431- 2607446
Email :
100village@tvgm.org

*Website :*
www.tvgm.org

தினசரி வாக்குத்தத்தம், செய்தி 100 கிராம ஊழிய அறிக்கை வெளியிடப்பட்டு வருகிறது.

REG. NEWS PAPER R.N.I. Number : TNMUL / 2000 / 4011

HUNDRED VILLAGE MINISTRY ஹண்ட்ரட் வில்லேஜ் மினிஸ்டிரி
ഹണ്ഡ്രഡ് വില്ലേജ് മിനിസ്ട്രി_ हन्ड्रेड विलेज मिनिस्ट्री